REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: தை 19உ செவ்வாய் (1—2—55) ★ ★ வெளியூர்: தை 20உ புதன் (2—2—55) [இதழ் 197

கண்ணிழந்த கிழவியின் கருத்தில்

காங்கிரஸ் தலைவர் தேபர் ராமராகிறுர்!

"நீயே எனது ராமன்; நீயே எனது கிருஷ்ணன்; நீயே எனது கடவுள்," இப்படி, அகில இந்திய காங்கிரசின் தலைவர் தேபர், தேர்தல் பிரச்சாரத்திற்காக கர்னூல் சென்றிருந்தபொழுது, 80 வயது நிரம்பி கண் பார்வை இழந்த ஒரு கிழவி, அவருக்கு மாலையிட்டு வாழ்த்தியிருப்பதாகச் செய்தி வெளிவந்துள்ளது. காரில் சென்று கொண்டிருந்த தேபர் சில கிராமவாசிகளால் மாலையணிவிக்கப்பட நிறுத்தப்பட்டார். அப்போது கூட்டத்திலிருந்த கிழவி ஒருத்தி கூட்டத்தை இடித்துத் தள்ளிக்கொண்டு வந்து தேபர் கழுத்தில் மாலையை அணிவித்து, அவரைத் தடவிக்கொண்டே மேற்கண்டவாறு கூறினுராம். இவற்ருல் நெகிழ்ந்த தேபர் அவரைத் தட்டிக் கொடுத்துவிட்டு, வணங்கிவிட்டு பின் சென்ருராம்.

'உடலுழைப்புக்குப் படித்த இளைஞர்களா?'

'அத்துறையிலுள்ள படிக்காதவர்கள் கதி என்னுவது?'

'படித்தவர்கள் உடலுழைப்பை மேற்கொள்ளுவது அவசியமற்றது'

'செல்வப் பெருக்கத்திற்கும் முட்டுக்கட்டையாகவும் முடியும்'

சர். ஆற்காடு இராமசாமியின் அறைகூவல்

"உடலுழைப்புக்கு எதிராக, படித்த இளைஞர்களிடமிருந்து இயல்பாகவும் உறுதியாகவுமான எதிர்ப்பு எதுவும் கிடையாது. உடலுழைப்பு இன்றியமையாதது எனத் தெளிவாகத் தெரியவரும் பட்சத்தில், தயக்கமின்றி அதை மேற்கொண்டு, சிறப்பிக்கத்தக்க முறையில் அதற்குத் தங்களை ஒப்படைத்தும் கொள்ளுகின்றனர். படித்த இளைஞர்களுக்கு வேலைதரும் வாய்ப்பினை உண்டாக்கித் தருவதுதான் இன்றைய முக்கிய பிரச்சினையாகும். குமாஸ்தாக்களாவதை மட்டுமே வேலையெனக் கொள்ளாமல், நாட்டின் செல்வத்தை பெருக்குவது என்ற உற்பத்திக் கருத்தில் வேலை தருவதைக் கொள்ளவேண்டும்."

"ஏர் உழுதல், குழி வெட்டுதல், கொல்லத்து வேலை செய்தல் ஆகிய உடலுழைப்புப் பணிகளில் படித்த இளைஞர்கள் ஈடுபட வேண்டுமெனக் கூறப்படுமானுல், அது விரும்பக் கூடியதுமல்ல; இலாபகரமானதுமல்ல. பண்படாத தொழிலாளர்களுக்கு நாட்டில் பஞ்சமில்லை. மேற்குறிப்பிட்ட தொழில்களை தங்கள் வாழ்க்கைத் தொழிலாகக் கொண்டு ஈடுபட்டுவரும் படிக்காத மக்களுக்கு, அத்தொழில்களும் கிடைக்கப்பெருது அவர்கள் திண்டாடும் ஒரேஒரு பலன்தான், அத்தொழில்களில் படித்த இளைஞர்களைப் பயிற்றுவிப்பதால் ஏற்படக்கூடும். உண்மையில் இந்த நிலை தேவைப்படும் ஒன்றுமல்ல; நாம் விழையும் ஒன்றுமல்ல."

"நடுத்தர வகுப்பினரைக் குறித்து சென்ற காலத்தில் கூறப்பட்டது போன்று, படித்தவர்களை வேலைக்கமர்த்தும் பிரச்சினையானது, அரசாங்கங்களையும் பொதுமக்களையும் எதிர்நோக்கி இருக்கும் பிரச்சினைகள் அனைத்திலும் தலையாய பிரச்சினையாகும். சிறிய பெரிய இடங்களில், ஓரிடத்திலிருந்து மற்ருேர் இடத்திற்கு பணி தேடி அலைவதில் தன்னுடைய அரிய காலத்தை வீணுக்குவதில் கழித்துவரும் படித்திருந்தும் வேலை கிடைக்கவில்லையே என நம்பும் ஒரு இளைஞனின் ஏமாற்றமானது, சமுதாயத்திற்கே ஒரு பெரும் அபாயமாகும். ஏமாற்றமடைந்துள்ள இளைஞன், தனக்கு எதிராக ஒவ்வொரு மனிதனும் இருக்கிருன் என எண்ணுகிருன். அந்த எண்ணம் முழுதும் மெய்ப்பிக்கக் கூடியதாக இல்லாமல் இருக்கலாம். இருந்தாலும் தன்னுடைய ஏமாற்றத்தினுல் ஏற்படும் வெறித்தனத்தினுல், சமுதாயத்திற்கும், ஒவ்வொரு மனிதனுக்கும் எதிராக அந்த இளைஞன் கிளம்பி விடுகிருன்."

—இவ்வாறு, திருவாங்கூர் பல்கலைக் கழகத் துணைவேந்தர் ஆற்காடு சர். இராமசாமி அவர்கள், கௌஹாதி பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழா விரிவுரையில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது:—

"கல்வியானது, முழுதும் நிரம்பியுள்ள ஒன்ருகும். அதை தொடக்கக் கல்வி, உயர்நிலைக் கல்வி, பல்கலைக் கழகக் கல்வி எனத் துண்டாடவும், பாகுபாடு படுத்தவும் கூடாது. ஒவ்வொரு கட்டமும் மற்ருெரு கட்டத்திற்கு இட்டுச் செல்வதாக உள்ளது. உயர் கட்டம் கீழ் கட்டத்தில் பயிற்றுவிப்பதைத் தாங்கி நிற்கிறது.

"சமூக நலம், தேசிய முன்னேற்றம் இவற்றின் அபிவிருத்தியில் உபயோகமானதும், புத்திசாலித்தனமானதுமான பங்கினை ஏற்றுச் செய்வதற்கு ஆற்றல் உடையவர்களாக இளைஞர்களை ஆக்குவதே பல்கலைக் கழகக் கல்வியின் நோக்கமாகும்.

"உயர்ந்த ரக தொழில் நுட்ப—தொழில் நுணுக்க நிபுணர்கள், தேசத்திற்குப் பெரும் மதிப்பிட முடியாத செல்வம் போன்ற விஞ்ஞானிகள், சமூகம் அமைதியாக முன்னேறுவதற்குத் தேவையான டாக்டர்கள், எஞ்சினீயர்கள் இவர்களைத் தயாரிப்பது இன்றியமையாததென்ருலும், ஒரு பல்கலைக் கழகம் நாட்டின் அடிப்படையான மதிப்புடைய காரியம் ஒன்றையும் செய்ய வேண்டியிருக்கிறது என்ற உண்மையையும் நாம் அலட்சியப்படுத்தி விடக்கூடாது.

"நாட்டு மக்களுக்கு உணர்ச்சியும், விழிப்புணர்வும் ஊட்டக்கூடிய வழிகாட்டக் கூடிய தலைவர்கள்—பெரும்பான்மை மக்கள் பின்பற்றத் தகுந்த தலைவர்கள் உருவாக்கப்பட வேண்டும் என்பதும் சுதந்திர இந்தியாவுக்குத் தேவையானதாகும்."

டி. டி. கே.-குடியரசுத் தலைவர் சந்திப்பு

ராஜினுமா குறித்துப் பேசப்பட்டதாம்

புதுடில்லி, ஜன. 31—

விலகல் கடிதம் தாக்கல் செய்துள்ள மத்திய சர்க்கார் வர்த்தக, தொழில் இலாகா மந்திரியான திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரி, குடியரசுத் தலைவர் டாக்டர் இராசேந்திர பிரசாதை சந்தித்ததாகத் தெரிகிறது. (விலகும் விவரம் பற்றிய செய்திகள் 3-ம் பக்கத்தில் பார்க்கவும்.)

அப்போது அவர் தமக்கும்—பிரதமர் நேருவுக்குமிடையே மத்திய அரசாங்க மந்திரிகளின் இலாகாக்களைத் திருத்தியமைப்பது பற்றி நடைபெற்ற கடிதப் போக்குவரத்தை அவரிடம் காட்டியதாக நம்பப்படுகிறது.

மந்திரி சபையிலிருந்து விலகுவதைக் குறித்துத் தாம் ஒரு முடிவுக்கு ஏற்கனவே வந்தாயிற்றென்றும், இனியும் அப்பிரச்சினையைப் பரிசீலிக்கும் நோக்கமில்லையென்றும் அவர் கருத்தறிவித்தாராம்.

காமன்வெல்த் மாநாட்டிற்குச் சென்றுள்ள பிரதமர் நேரு, திரும்பும் வரையில் மட்டுமே தாம், வர்த்தக, தொழில் இலாக்கா மந்திரியாக பதவி வகிப்பாரென்றும் திரு. டி. டி. கே. தெரிவித்திருக்கிருராம்.

பஞ்சாப் ஆசிரியர்கள்

பட்டினிப்போர் துவக்குவர்

சார்னல், ஜன. 31—

பஞ்சாப் போர்டு ஆசிரியர்கள் சங்கத்தின் நிர்வாகக் குழு, பஞ்சாப் சர்க்கார், தனது வாக்குறுதிகளை வரும் பிப்ரவரி 6-ந் தேதிக்குள் அமுல் செய்யாவிட்டால், அன்று முதல் சட்டசபைக் கட்டிடத்தின் முன் சத்தியாக்கிரகமும் உண்ணுவிரதமும் மேற்கொள்ளுவது என்று முடிவு செய்துள்ளது என்று தெரிகிறது.

★★★★★★★ ★★★★★★★★★★

பெங்களூர் மாநாடுகள்

★

ஒத்தி வைக்கப்பட்டிருந்த கர்நாடகப் பகுதி தி. மு. கழக முதல் சமூக சீர்திருத்த, அரசியல் மாநாடுகள், பெங்களூர் நகரில், பிப்ரவரி 12, 13 தேதி (சனி, ஞாயிறு)களில் நடைபெறும் என்று தோழர் உசேன் அறிவிக்கிருர்.

★★★★★★★★★★★★★★★★

பிரெஞ்சு சர்க்கார் தோல்வி!

சிவில் நிர்வாக வரவு - செலவுக் கணக்கில், ஒரு மாதக் கடன்களைப் புதுப்பிக்குமாறு பிரெஞ்சு சர்க்கார் தேசிய சட்டசபையில் கொண்டுவந்த பிரரேபணை தோல்வியுற்றது. ஆனுல், இதற்காக மந்திரிசபை இராஜினுமாச் செய்ய வேண்டியதில்லையாம்.

நேபாள மந்திரி சபை ராஜினுமா!

நேபாள பிரதமர் எம். பி. கொய்ராலா, தனது சர்க்கார் ஆலோசனை சபையில் தோற்றுவிட்டதை யொட்டி, மன்னர் சபையிடம் ராஜினுமாவை தாக்கல் செய்துவிட்டதாகக் கூறப்படுகிறது. (விவரம் 2-ம் பக்கம் பார்க்கவும்.)

சட்டசபையில் வெளிநாட்டிலாகா மானியக் கோரிக்கையின் போது அவரது மந்திரி சபை தோல்வி கண்டது.

மந்திரி சபையின் ராஜினுமாவுக்குப் பிறகு சட்டசபையைக் கலைத்துவிட செய்யப்பட்ட முயற்சிகள் வீணுயின. மன்னர் சபை அதற்குச் சம்மதிக்கவில்லையாம்.

ராஜினுமாவை ஏற்றுக்கொள்ள மன்னர் சபைக்கு அதிகாரமில்லாததால், மன்னரின் நேரடி பார்வைக்கே அது அனுப்பப்படுமாம்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

பொதுக் குழுக் கூட்டம்

★

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக் குழுக் கூட்டம் பிப்ரவரி 19, 20-ந் தேதி (சனி, ஞாயிறு) களில், கோவை மாவட்டம் பேரூரில் நடைபெறும்.

ஆராயப்படும் பொருள், கூட்டம் நடைபெறும் இடம் பின்னர் அறிவிக்கப்படும்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தேபருக்குப் பரிசு

காங்கிரஸ் தலைவர் யூ. என். தேபருக்கு சௌராஷ்டிரத்தைச் சேர்ந்தவர்கள் 4,00,001, ரூபாயும், ஒரு வெள்ளிப் பேழையும் பரிசாக அளித்துள்ளனராம்.

சித்தூர் தமிழர் பிரச்சினை

சீக்கிரமே எல்லைக் குழு நியமிக்கப்படும்

யூனியன் உதவி மந்திரி தரும் தகவல்

சித்தூர், ஜன. 31—

மத்திய அரசாங்கம் விரைவிலேயே ஒரு எல்லைக் குழுவை நியமிக்கும் என்றும், அதற்கிடையில் இந்த மாவட்டத்தில் வாழும் தெலுங்கர்களும், தமிழர்களும் ஒருவருக்கொருவர் நல்லெண்ணத்துடன் வாழவேண்டுமென்றும், எந்த வகையிலும் இருவரும் பகைத்துக் கொள்ளக் கூடாதென்றும், கூட்டமொன்றில் பேசிய யூனியன் உதவி மந்திரி எம். வி. கிருஷ்ணப்பா குறிப்பிட்டிருக்கிருர்.

சென்னை மேயர் திரு. எம். ஏ. சிதம்பரம், சென்னை நகரில் தொழில் அபிவிருத்திக்கு அதிக வசதிகளைச் செய்து தருவதற்காக தொழில் பிரதேசங்களை நிறுவுவது பற்றி நகரசபை யோசித்துவருவதாகக் கூறியுள்ளார்.

காங்கிரஸ் ஆட்சிக்கு வருமேயென்ற பயமில்லையாம்!

திரு - கொச்சி கம்யூனிஸ்டுகள் தீர்மானம்

திருவனந்தபுரம், ஜன. 28—

பிரஜா சோஷலிஸ்டுகளை நீக்கிவிட்டு, காங்கிரஸ் பதவிக்கு வருவது பற்றி தாங்கள் சிறிதளவேனும் பயப்படவில்லை என்று திரு—கொச்சி கம்யூனிஸ்டு கட்சி அறிக்கை ஒன்றில் கூறியுள்ளது.

பதவிக்குத் திரும்பி வரவேண்டுமென்ற நோக்குடன் உள்ள காங்கிரஸ், எப்படியாவது பதவியைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமென்ற நோக்குடன் உள்ள பி.-சோ. கட்சி — இவைகளுக்கிடையே நடைபெறும் சண்டையில் தன்னையும் சிக்க வைத்துக்கொள்ள கம்யூனிஸ்டு கட்சி தயாராக இல்லை என்றும் அவர்கள் தீர்மானம் கூறுகிறது.

காங்கிரஸ் ஆட்சிக்குப் பயந்து கொண்டு பி. எஸ். பி. மந்திரி சபையை ஆதரிக்கமாட்டோம் என்று கம்யூனிஸ்டு கட்சியின் அறிக்கை மேலும் கூறுகிறது.

இன்று கம்யூனிஸ்டு கட்சிக் கூட்டத்தில் இதுபற்றி நீண்டதோர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இப்போது நிலவும் சூழ்நிலையைப் பயன்படுத்திக்கொண்டு மக்களுக்கு ஏதாவது நன்மையைச் செய்ய முடியுமா என்று கம்யூனிஸ்டு கட்சி பரிசீலனை செய்கிறதாம்.

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணுதுரை

சென்னை 1—2—1955 செவ்வாய்

தோல்வி நிச்சயம்!

பார்மோசா பிரச்சினை கடந்த சில வாரங்களாக நெருக்கடியான நிலைமையை அடைந்திருக்கிறது; 'மூன்ருவது உலகப் போர் மூண்டுவிடுமோ,' என்று எண்ணக்கூடிய அளவில் தூரக்கிழக்கு நிலைமை மாறிவருகிறது.

பார்மோசாவில் பதுங்கி வாழும் சியாங்-கே-ஷேக், 'கம்யூனிஸ்டு சீன மீது படையெடுக்கப் போகிறேன்,' என்று அமெரிக்கத் துப்பாக்கியின் பின்னுல் நின்று கூவிக்கொண்டே இருக்கிருர்.

தனது நண்பரைப் பாதுகாக்கப் பசிபிக்கில் தனது படையை அமெரிக்கா தயாராக நிறுத்தியிருக்கிறதாம்.

நெருக்கடியான நிலைமை ஏற்பட்டால் தன்னுடைய விருப்பம்போல் நடந்துகொள்ள அமெரிக்க சட்ட சபையிடம் அமெரிக்க ஜனுதிபதி ஐசன்ஹோவர் அதிகாரம் பெற்றுவிட்டார்.

சீனக் கரையோரத்தில் ரஷ்ய 'சப்மரீன்'கள் காணப்படுவதாக செய்திகள் வெளியாகியுள்ளன; சீனத் தீவுகள் மீது சிறிய சிறிய தாக்குதல்களும் நடைபெற்ற வண்ணமுள்ளன.

சீனப் பிரதமர் சூ-என்-லாய், பார்மோசாவை மீட்பதென்று தன் நாட்டு மக்கள் உள்ள உறுதியுடன் இருப்பதாக அறிவித்துவிட்டார். அத்துடன் மட்டுமல்ல—'பார்மோசா பிரச்சினை சீனுவின் உள்நாட்டுப் பிரச்சினை' என்றும், 'அதில் தலையிட அமெரிக்காவுக்கு உரிமை கிடையாது,' என்றும் பீகிங் சர்க்கார் சார்பில் அவர் வலியுறுத்திவிட்டார்.

உலகில் சமாதானத்தைப் பாதுகாப்பதற்கென்று அமைக்கப்பட்ட ஐ. நா. சபையின் பாதுகாப்புக் குழுவில், 'தூரக்கிழக்கில் போர் நிறுத்தம் ஏற்பட வேண்டு'மென்ற தீர்மானம் ஒன்றை, நியூசிலாந்து நாடு கொண்டுவந்திருக்கிறது.

இந்த நிலைமையில், 'பிரிட்டனின் பங்கு என்ன'வென்பதை இப்போது நடைபெறும் காமன்வெல்த் முதல் அமைச்சர்கள் மாநாடு தீர்மானிக்க இருக்கிறது.

இவ்வளவு நிகழ்ச்சிகளுக்கும் காரணம் ஒன்றுதான்; அது தான் அமெரிக்காவின் போர் வெறி. ஆதிபத்திய நாடுகளுக்குத் தலைவனுய், ஆசிய மக்களின் சுதந்திரத்தைப் பல வழிகளிலும் பறித்து, தனது முதலாளிகளின் பணப் பையை நிரப்பி, பின்னர், தனது போர் வெறியையும் தணித்துக் கொள்ள வேண்டுமென்று அமெரிக்கா துடித்துக் கொண்டிருக்கிறது.

இந்த நூற்றுண்டின் ஆரம்பத்தில் ஆசிய மக்களிடையே ஏற்பட்ட விழிப்புணர்வு, அமெரிக்காவின் ஆதிபத்திய வெறிப் போக்குக்கு சாவுமணியடித்துக்கொண்டே வருகிறது; அண்மையில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் பல, உலக அரங்கில் அமெரிக்கா தலைகுனிந்து நிற்குமாறு செய்துவிட்டன.

இந்தோ-சீனப் பிரச்சினை பற்றி ஜினிவாவில் நடைபெற்ற மாநாட்டில், அமெரிக்கா பெரும் தோல்வி அடைந்தது; அதன் பின்னர், 'சீட்டோ' என்ற பெயரில் அமெரிக்கா துவக்கிய இராணுவ அமைப்பு மற்ருெரு பெரும் தோல்வியாகக் காட்சி அளிக்கிறது.

அடுத்து, வரும் ஏப்ரல் மாதத்தில் நடைபெற இருக்கும் ஆசிய—ஆப்பிரிக்க மாநாடு, அமெரிக்காவுக்கு விடுக்கப்பட்ட மற்ருெரு எச்சரிக்கையாகும்.

ஆசியப் பகுதியில் தனக்கு ஏற்பட்ட தோல்விகளைக் கண்டு மனம் நொந்துபோயிருக்கும் அமெரிக்கா, இப்போது தனது போர் வலிமையை பார்மோசா பிரச்சினையில் வெளிக்காட்டி, ஆசிய நாடுகளை மிரட்டலாம் என்று கனவு காண்கிறது.

பார்மோசா, சீனுவிற்குச் சொந்தமான நாடு. சியாங்-கே-ஷேக், கம்யூனிஸ்டு சீனுவின் சர்க்கார் பிடியில் சிக்காமல் ஓடி ஒளிந்து வாழும் கைதி. அந்த மனிதரை ஆதிபத்திய நாடு ஆதரிப்பதைக் கண்டு, உலகம் கைகொட்டி நகைக்கிறது.

எண்ணற்ற சிறந்த சிந்தனையாளர்களைக் கொண்ட நாடு—ஜெபர்சன், ஆபிரகாம் லிங்கன் போன்ற விடுதலை வீரர்களால் பேணி வளர்க்கப்பட்ட நாடு, இன்று, போர்வெறி கொண்டு, எதுமறியா மக்களை கோடிக்கணக்கில் கொன்று குவித்து, அந்த மக்களின் சந்ததியினரிடமிருந்து வெளிப்படும் வேதனைக் குரலை தனது வெற்றிக் கீதத்திற்கு அடிப்படை நாதமாக அமைக்க வேண்டுமென்று எண்ணுகிறது.

ஆண்டாண்டு காலமாக ஜனநாயக விரும்பிகளால் பாராட்டப்படும் அமெரிக்க சுதந்திரச் சிலையின் நெற்றியில், ஆசிய மக்கள் சிந்திய இரத்தத்தை எடுத்துத் திலகமிட வேண்டுமென்று வாஷிங்டன் அதிபர்கள் போர்க்கோலம் பூண்டு நிற்கின்றனர். அதன் விளைவுதான், பார்மோசாவில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடி!

பார்மோசா, தன்னுடையது—தனக்கு உரித்தானது என்கிறது சீன.

தனது நாட்டில் குவிந்து கிடக்கும் போர்க்கருவிகளுக்கு வேலை வேண்டும் என்று விரும்புகிறது அமெரிக்கா.

கொரியாவில் அமெரிக்கப் படைகள் போரிடுவதாகச் சொல்லி, மக்களைக் கொன்று குவித்தார்கள். இன்று, கொரியாவில், அமெரிக்கா ஆதிக்கம் பெற்றிருந்தாலும், பீரங்கிகளைக் கிடங்குகளில் போட்டு பூட்டி வைத்திருக்கும் நிலைமையில் தான் இருக்கிறது.

ஆனுல், அமெரிக்காவின் போர் வெறிக்கு ஆசிய மக்கள் பலியாகும் நிலைமை ஏற்பட்டாலும், இறுதியில், ஆசிய மக்கள் தான் வெற்றிபெறப் போகிருர்கள் என்பது நிச்சயம்.

நாட்டுக்குடையவன்தான் வெற்றி பெற்று வருகிருன்—அதுதான் நியதியும்கூட—என்பது, சரித்திரம் சொல்லும் பாடமாகும்.

கைத்தறி தொழிலுக்கு கடன் உதவி

சென்னைக்கு ரூ. 18 லட்சம்

புதுடில்லி, ஜன. 29—

கைத்தறித் தொழில், மற்றுமுள்ள சிறு சிறு குடிசைக் கைத்தொழில்களின் அபிவிருத்திக்காக இந்திய சர்க்கார் மேலும் மானியத் தொகைகளும் கடன்களும் அளிக்க முன்வந்திருக்கிறது.

சென்னை மாநிலத்துக்குக் கடன் தொகையாக ரூ. 17,93,150 வழங்கப்பட்டிருப்பதாகவும், இத்தொகை பூராவும், கூட்டுறவு நிறுவனங்களின்கீழ் கொண்டு வரப்படும் தறிகள் சம்மந்தமாக கூட்டுறவுச் சங்கங்களுக்கான நடப்பு மூலதனக் கடன்களை யளிக்கப் பயன்படுத்தப்படும் என்றும், மாநில செருப்பு உற்பத்தித் தொழிலுக்கென இரண்டு 'சர்வீஸ்' நிலையங்களை அமைக்க ரூ. 1,03,710 மானியமாக வழங்கப்படுமெனவும் கூறப்படுகிறது.

மைசூர் மாநிலத்துக்குக் கடனுக ரூ. 16,370-ம், மானியமாக ரூ. 1,25,102-ம் கொடுக்கப்படுமெனவும், யெம்மிகனூர் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி விற்பனை சங்கத்துக்கு மானியமாக ரூ. 50,625-ம் வழங்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கொய்ராலாவிற்கு 'தலைவலி' ஆரம்பம்

நேபாள அரசாங்கத்திற்கு சட்டசபையில் முதல்தோல்வி

நேபாள அயல் நாட்டமைச்சர், வெளிநாட்டு விவகார இலாகாவுக்கான மானியக் கோரிக்கையை சட்டசபையில் கொண்டுவந்த போது, சர்க்கார் மேற்படி கோரிக்கையில் தோல்வி கண்டது. உடனேயே நேபாளப் பிரதமர் கொய்ராலா, சபையினின்றும் வெளியேறிவிட்டிருக்கிருர். இதையொட்டி, இனிமேல் வருகின்ற விவகாரங்கள் சிறிது கடுமையாகவே மாறி, நெருக்கடி முற்றலாம் என எதிர்பார்க்கப்படுகிறதாம்.

சட்டசபையில் உள்ள மொத்தம் 96 உறுப்பினர்களில் 45 பேர் பிரதமரின் கட்சியினராவர். 11 பேர் மக்கள் நேபாள காங்கிரசாரும், நேபாளி தேசிய காங்கிரஸ் உறுப்பினர்களும் ஆவர். இவர்களில் நேபாளி காங்கிரசினர் சட்டசபையில் சேர மறுத்துவிட்டிருக்கின்றனர்.

இந்தியாவிற்கு இரும்புத் தண்டவாளங்கள்

ஜப்பானிலிருந்து வருகை

ஜப்பானிலிருந்து 3600 டன் எடையுள்ள ரயில் தண்டவாளங்கள் பம்பாய் வந்து சேர்ந்திருக்கின்றன.

ஏற்கனவே, இந்தியா, 40,000 டன் இரயில் தண்டவாளங்களுக்கு ஜப்பானிடம் 'ஆர்டர்' செய்திருந்தது. இதில், இப்போது முதன் முறையாக 3600 டன் அனுப்பப்பட்டிருக்கிறது. மேலும், இந்திய சர்க்கார் 'ஆர்டர்' செய்திருந்த 6000 டன் உருக்குத் தகடுகளும் கப்பலில் வந்துள்ளதாம்.

தற்கொலைகள் அதிகரிப்பு

கடந்த 1954-ம் ஆண்டில் மட்டும் ஜப்பான் நாட்டில் 20,000 பேர் தற்கொலை செய்துகொண்டுள்ளனராம். இது, ஆண்டுதோறும் இதுவரை நிகழ்ந்துள்ள எண்ணிக்கையில் மிகப் பெரியதாம். மேலும் ஜப்பான் மக்களைக் கொல்பவைகளில், தற்கொலை செய்துகொள்வது 9-வது இடத்தைப் பெற்றுள்ளதாம்.

விவசாயக் குடும்பங்கள்

சில புள்ளி விவரங்கள்

176 லட்சம்குடியானவர்கள் உள்ளனர்

இந்தியா முழுமையிலுமுள்ள மொத்தம் 580 லட்சம் கிராமாந்திரக் குடும்பங்களில் 176 லட்சம் குடும்பதவர் குடியானவத் தொழில் புரிவோர் என்று விவசாயத் தொழிலாளர் விசாரணைக் குழு விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அந்த அறிக்கை, 1951-ல் இருந்த நிலவரத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில், மொத்த கிராமாந்திரக் குடும்பங்களில் 30·4 சதவிகிதத்தினர் விவசாயிகள்; 22 2 சத விகிதத்தினர் நிலச் சொந்தக்காரர்கள்; 27·2 சதவிகிதத்தவர் குத்தகைக்காரர்கள்; பாக்கி 20·2 சதவிகிதத்தவரும் விவசாயத் தொழிலில் இல்லாதவர்கள் என்று கூறுகிறது.

விவசாயக் குடும்பங்களின் விகிதாச்சாரத்தைக் குறிப்பிடுகையில், வடமேற்கு இந்தியாவில் 77 சதவிகிதத்தவரும், மேற்கு இந்தியாவில் 84 சதவிகிதத்தினரும், மத்திய இந்தியாவில் 78 சதவிகிதத்தவரும், தென்னிந்தியாவில் 79 சதவிகித்தினரும் விவசாயத் தொழில் புரிவோர் என்றும், குறிப்பிட்டுள்ளது.

அகில இந்திய விவசாயத் தொழிலாளர் நிலைபற்றிய விசாரணையை தொழிலாளர் நல இலாகா 1950—51-ல் நடத்தியது. 27 மாநிலங்களில், பொறுக்கி எடுக்கப்பட்ட 810 கிராமங்களில் விசாரிக்கப்பட்டு தயாரித்துள்ள விவரம்தான் மேலே தரப்பட்டுள்ளதாகும்.

மொத்தம் 1,04,000 கிராமக் குடும்பங்களில் 'மாதிரி' முறையில் மேற்கண்ட கணிதி தயாரிக்கப்பட்டதென்றும், அந்த மக்களுடைய பொதுவான பொருளாதார நிலை, தொழில் அமைப்பு ஆகியவற்றை மதிப்பிடுவதே இதன் நோக்கம் என்றும் கூறப்படுகிறது.

பிரிட்டனில் துணி இறக்குமதி

லங்காஷயர் ஆலைகளின் எதிர்ப்பு

பிரிட்டனில், வெளிநாட்டுத் துணிமணிகள் வந்து குவிந்து கிடக்கும் நிலையைத் தவிர்க்க சர்க்கார், வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கோரிக்கொண்டு, லங்காஷயரிலுள்ள 1,500-க்கு மேற்பட்ட நூற்பு, நெசவுஆலைகள் வற்புறுத்தி வருகிறதாகத் தெரிய வருகிறது.

அடுத்த மாதம் 15-ந் தேதிக்குள், வெளிநாட்டுத் துணி இறக்குமதி பிரச்சினை குறித்து ஆலைகளுடன் விவாதிக்க வர்த்தகக் குழு உதவி மந்திரி சம்மதித்திருக்கிறாராம்.

தற்போது, பிரிட்டனில் ஆண்டு ஒன்றுக்கு 25 கோடிகெஜம் வெளி நாட்டுத் துணி இறக்குமதி செய்யப்படுகிறது.

நெசவாளர்களுக்கு நூல் கிடைக்க வசதி

நூற்பு இயந்திரங்கள் வைத்திருப்போர், ஜவுளி கமிஷனரின் அனுமதி இல்லாமல் நூல் வாங்குவதை இந்திய சர்க்கார் தடை செய்துவிட்டிருப்பது அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கைத்தறித் தொழிலுக்குப் போதுமான நூல் கிடைக்கச் செய்வதற்காகவே மத்திய சர்க்கார் மேற்கண்ட தடையைப் பிறப்பித்துள்ளது என்று காரணம் காட்டப்பட்டிருக்கிறது.

புற்றுநோய் சிகிச்சை

புதியமுறை கண்டுபிடிப்பு

புற்றுநோயைக் குணப்படுத்துவதற்கு, பிரிட்டிஷ் மருத்துவர்கள் தற்போது கதிர் இயக்கத்துடன் கூடிய தங்கத்தை உபயோகித்து வருகின்றனர். இந்த கதிர் இயக்கத்துடன் கூடிய தங்க ஊசிகள், பெர்க்ஷயரைச் சேர்த ஹிர்வெல் எனும் இடத்தில் தயாரிக்கப்படுகின்றனவாம். 10-ல் 1 அங்குல நீளமுள்ள இந்த ஊசிகள் உடலில் புற்றுநோய் கண்டுள்ள இடங்களில் செலுத்தப்படுகின்றன. இவற்றிலுள்ள கதிர் இயக்கம், 10 நாட்கள் வரை நீடித்திருக்கின்றன. பிறகு இந்த ஊசிகள் உடலிலேயே இருந்தாலும் அவற்றுல் உடலுக்குக் கெடுதல் ஏதும் ஏற்படவும் செய்யாதாம்!

நிறைவேற வேண்டுமே!

இந்தியாவில் அமைக்கப்பட இருக்கும் 3 ரசாயன உர உற்பத்தித் தொழிற்சாலைகளை தென்னுட்டிலேயே அமைக்க வேண்டுமென்று, ரசாயன உர உற்பத்திக் குழு, மத்திய சர்க்காருக்குச் சிபாரிசு செய்யுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. விஜயவாடாவிலோ, அல்லது சென்னை மாநிலத்தைச் சேர்ந்த நெய்வேலி பிரதேசத்திலோ இவை அமைக்கப்படலாம் என்று கூறப்படுகிறது.

மலையாள கவிக்கு ரூ. 15,000

புதுடில்லி, ஜன. 30—

மலையாளத்தைச் சேர்ந்த கவிஞரான வள்ளத்தோல் நாராயண மேனனுக்கு, 'சாகித்திய அகாடமி' ரூ. 15,000 கொடுப்பதென முடிவு செய்திருக்கிறது. இத்தொகை முழுவதும், 'ரிக்' வேதத்திற்கு அவர் எழுதியுள்ள மலையாள மொழி பெயர்ப்பு நூலை பிரசுரிக்கச் செலவு செய்யப்படுமாம்.

கிழக்கு பாகிஸ்தானில் தடையுத்தரவு

டாக்கா, ஜன 31—

கிழக்கு பாகிஸ்தானில், பிப்ரவரி 1-ந் தேதி தொட்டு, மாநிலமெங்கும் கூட்டங்களோ, ஊர்வலங்களோ நடைபெறக்கூடாது என்று 144 தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சில அரசியல் கட்சிகள், பிப்ரவரி 21-ந் தேதியன்று மாநில அமைதியைக் குலைக்கும் வகையில் திட்டமிட்டு வருவதாகக் காரணம் காட்டி மேற்படி தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என சர்க்கார் அறிவிப்பு கூறுகிறது.

கடந்த ஆண்டு இதே நாளில் (1954 பிப்ரவரி 21) நடைபெற்ற மொழிக் கிளர்ச்சியின்போது போலீஸ் துப்பாக்கிப் பிரயோகத்தின் விளைவாகப் பலர் உயிர் இழந்தது நினைவிருக்கலாம்.

கோடை காலத்தில் நேரு மாஸ்கோ செல்வார்

இந்தியப் பிரதமர் பண்டித நேரு வருகிற கோடைகாலத்தில் சோவியத் நாட்டிற்குச் செல்வார் என்று, மாஸ்கோவில் உள்ள இந்தியத் தூதுவர் கே. பி. எஸ். மேனன் கூறினுர்.

இவர் இப்போது இரண்டு மாத விடுமுறையில் இந்தியா வந்திருக்கிருர்.

பண்டித நேரு மாஸ்கோ செல்வதற்கு இரண்டொரு வாரங்களுக்கு முன்பே தான் மாஸ்கோவுக்கு சென்று விடுவதாக மேனன் மேலும் தெரிவித்தார்.

சோவியத் அரசாங்கமும் அதன் மக்களும் நேருவின் வரவை ஆவலுடன் எதிர்பார்க்கிருர்களாம்.

கழகச் செய்திகள்

வயிரிசெட்டிப்பாளையம் தி. மு. கழகம்

19—1—55 இரவு 8½ மணிக்கு, திருமலை தேநீர் விடுதியில், தோழர் ச. கணபதி தலைமையில் தி. மு. கழகக் கிளை அமைப்புக் குழு கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் கை. ஆறுமுகம், இரா. சுந்தரேசன், டி. கே. பெரியசாமி, சி. மாணிக்கம் ஆகியோர் கழகக் கொள்கைகள் பற்றியும் உறுப்பினர்கள் கடமைகள் பற்றியும் சொற்பொழிவாற்றினர். பின்னர் நடைபெற்ற கழக நிர்வாகிகள் தேர்தலில் சி. மாணிக்கம் செயலாளராகவும், டி. கே. பெரியசாமி துணைச் செயலாளராகவும், பி. நடராசன் பொருளாளராகவும், கை. ஆறுமுகம் மாவட்டப் பிரதிநிதியாகவும், மற்றும் ஒன்பது பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இன்னும் ஒரு மாதத்திற்குள் கழகத் துவக்க விழா நடத்துவதென தீர்மானிக்கப்பட்டது.

சென்னை—புரசை தி. மு. கழகம்

23—1—55 காலை 11 மணிக்கு, புரசை, எண் 29, அரசப்பமுதலி தெருவில் நடைபெற்ற கழகச் செயற் குழு உறுப்பினர் கூட்டத்தில், புதிதாக 13 பேர் கொண்ட செயற் குழு உறுப்பினர்களும், மாவட்டப் பிரதிநிதியாக தோழர் வி எஸ். கோவிந்தராசனும் தேர்ந்தெடுக்கப்பட்டு, புரசை, எண் 29, அரசப்பமுதலி தெருவில் கழகக் காரியாலயம் அமைக்கப்பட்டது.

புதியம்புத்தூரில் தி. மு. க. பொதுக்கூட்டம்

24—1—55 இரவு 7½ மணிக்கு கழகச் சார்பில், தோழர் கே. வி. கே சாமி தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், தோழர் வே. அற்புதமணி 'வள்ளுவர் காட்டிய வழி' என்பது பற்றி பேசிய பின்னர், தோழர் க. அன்பழகன் அவர்கள், மதத்திலுள்ள ஆபாசமான கருத்துக்களையும் அறிவுக்கொவ்வாத சட்டுக்கதைகளையும் எடுத்துக்கூறி அத்தகைய மதம் நமக்கு அவசியம் இல்லை என்றும், தென்னாட்டை வடநாடு எத்தவிதத்தில் அடக்கி ஆள்கிறது என்பதை எடுத்துக் கூறி, திராவிட நாட்டுப் பிரிவினையை வலியுறுத்தியும் சொற்பொழிவாற்றினர்.

பழைய வத்தலக்குண்டு தி. மு. கழகம்

21—1—55 இரவு 10 மணிக்கு நடைபெற்ற கழகப் பொதுக் குழு உறுப்பினர் கூட்டத்தில் சென்ற ஆண்டு வரவு-செலவு சரிபார்த்து ஒப்புக் கொள்ளப்பட்ட பின், புதிய ஆண்டிற்கான கழக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :— செயலாளர்: நா. பிச்சைமணி; துணைச் செயலாளர்: மு. இருளப்பன்; பொருளாளர்: வை. மாணிக்கம்; விளம்பர உறுப்பினர்: அ. பழனிச்சாமி; மாவட்டப் பிரதிநிதி: நா. மாணிக்கம். மற்றும் 6 பேர் செயற்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சேவூர் (வ. ஆ. மாவட்டம்) தி. மு. கழகம்

17—1—55 பகல் 1 மணிக்கு கழகப் பணிமனையில், தோழர் வி. இ. செயராமன் தலைமையில் நடைபெற்ற கழகச் செயற்குழுக் கூட்டத்தில் சென்ற ஆண்டு மே—ஜூலை வரவு-செலவு கணக்கு பரிசீலனை செய்யப்பட்டது. பிப்ரவரி திங்கள் முதல் வாரத்தில் பொங்கல் விழாப் பொதுக்கூட்டம் நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

அறந்தாங்கியில் தி. மு. கழகப் பொதுக் கூட்டம்

22—1—55 மாலை 6 மணிக்கு, தோழர் மா. சு. அடைக்கலம் தலைமையில், தேரடித் திடலில் நடைபெற்றது. தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் திராவிட நாட்டு பிரிவினை அவசியத்தையும், கழகக் கொள்கையை விளக்கியும் சொற்பொழிவாற்றினார்.

புதூர்பாளையம் தி.மு. கழக (கிளை) துவக்கம்

23—1—55 மாலை 5-30 மணி அளவில், தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் கழக மனையில், கழகக் கொடியை ஏற்றுவித்தார். மாலை 6 மணிக்கு தோழர் என். பிச்சை தலைமையில் நடைபெற்ற துவக்க விழாக் கூட்டத்தில் தோழர்கள் ஆ. துரைஅரசன், கே. கே. சாமி, அதியமான், செங்குட்டுவன், வளர்மதி, தம்புசாமி ஆகியோர் பேசியதும், தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் திராவிட மக்கள் நலிவுற்ற வரலாறு பற்றியும், தி. மு கழக இலட்சிய வரலாறு பற்றியும் சொற்பொழிவாற்றினார்.

புதுவை தி. மு. கழகம்

23—1—55 மாலை புதுவை தி. மு. கழகத்தின் இவ்வாண்டு நிர்வாகிகள் தேர்தல் நடைபெற்றது. செயலாளர்: ச. சிவப்பிரகாசம்; துணைச் செயலாளர்: செ. கோவிந்தராசன்; பொருளாளர்: கோ. பாண்டியன்; நிதி பரிசோதனையாளர்: கே. ஏ. ஜலீல், கோ. இராமச்சந்திரன்; செயற் குழு உறுப்பினர்கள்: த. இரத்தினம், ந. தியாகராசன், சி. மணி, பொ. குப்புசாமி, இரா. பாலகிருஷ்ணன், இரா. தொல்காப்பியன், இரா. இராமச்சந்திரன், கு அரங்கநாதன், எல். மோத்திலால், வி இராமசாமி.

முதலியார்பேட்டை, உழவர் கரை, தேங்காய்த்திட்டு, ஒர்லேயான்பேட் (புதுப்பாளையம்பேட்) ஆகிய நான்கு ஊர்களிலும் புதுவை தி. மு. கழகக் கிளைகள் நிறுவப்பட்டுள்ளன. இன்னும் பல ஊர்களிலும் கிளைக் கழகங்களை துவக்கி வைக்க ஆங்காங்குள்ள தோழர்கள் முயற்சிக்கின்றனர்.

தேவபாண்டயம் (தெ.ஆ.) தி. மு. கழகம்

24—1—55ல் தோழர் டி. கே. ஏ. மணி தலைமையில் நடைபெற்ற கழக உறுப்பினர்கள் கூட்டத்தில். புதிய கழக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :— செயலாளர்: கே. தனக்கோடி; துணைச் செயலாளர்: வி. செவத்தான்; பொருளாளர்: டி. பி. கேசவன்; மாவட்டப் பிரதிநிதி: ந. நாச்சியப்பன். செயற்குழு உறுப்பினர்கள்: வி. வாசுதேவன், எம். வேலாயுதம், கே. அங்கமுத்து, வி. கருப்பன், வி. மாணிக்கம், பி. கண்ணன், எஸ். நாராயணசாமி, பி. எம். நடேசன், வி. அண்ணாமலை, எஸ். கருப்பன், ஆர். முத்தையா, பி. கே. நாராயணசாமி, பி. நாராயணன், பி. துரைசாமி. பின்னர், மார்ச்சு அல்லது ஏப்ரலில் கழக 5-வது ஆண்டு விழா நடத்துவதெனவும், விழாவில் ஒரு நாடகம் நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

கடம்பூர் தி. மு. கழகம்

23—1—55 இரவு 8-30 மணிக்கு, தோழர் எம். எஸ். பி. சாமி தலைமையில் நடைபெற்ற கழகச் செயற்குழு உறுப்பினர் கூட்டத்தில், 21–1–55ல், விருதுநகர் தோழர் எம். எஸ். பி. அவர்கள் இயற்கை எய்தியமைக்கு அனுதாபம் தெரிவித்துக் கொண்டதுடன் மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

சென்னை (43-வதுவட்டம்) தி. மு. கழகம்

23—1—55 பிற்பகலில், கழகப் பணிமனையில் நடைபெற்ற கழகச் செயற்குழு கூட்டத்தில், 11—10—54 முதல் 31—12—54 வரையுள்ள கழக வரவு-செலவு கணக்குகளும் சரிபார்க்கப்பட்ட பின்னர், பிப்ரவரி திங்களில் நடைபெறவிருக்கும் கழக 4-ம் ஆண்டு விழாவை நடத்துவதற்கான நிதி வசூல் செய்யும் பொறுப்பு தோழர்கள் மு. புரட்சிமணி, மு. அரங்கநாதன், வே. கன்னியப்பன் ஆகியோரிடம் ஒப்படைக்கப்பட்டது. மற்றும் கிளைக் கழக ஆக்கவேலைகள் சம்மந்தப்பட்டவைகளும் கவனித்து முடிவு செய்யப்பட்டன.

திருப்புகலூர் தி. மு. கழகம்

16—1—55 காலை 11 மணிக்கு தோழர் பி. எஸ். முத்தழகு தலைமையில் நடைபெற்ற கிளைக் கழக பொதுக் குழு உறுப்பினர்கள் கூட்டத்தில், விரைவில் ஒரு பொதுக் கூட்டம் நடத்துவதென்றும், மற்றும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

குந்தையில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

24—1—55 பகல் 2 மணிக்கு, தி. மு. கழகச் சார்பில், குந்தாபாலம் காந்தி மைதானத்தில், தோழர் கா. மாதன் தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. திரு. ஜோதி அவர்கள் கழகக் கொடி ஏற்றினைத்தார். தோழர்கள் வீ. கா. ஒளியழகன், வி. சண்முகநாதன், ஈ. வெ. கி. சம்பத் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

பட்டிவீரன்பட்டி தி. மு. கழகம்

27—1—55ல், தோழர் டி. என். எஸ். மீனாட்சிசுந்தரம் இல்லத்தில் நடைபெற்ற கழகச் செயற்குழுக் கூட்டத்தில், பொதுக் கூட்ட வரவு - செலவு கணக்குகள் சரிபார்க்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்ட பின், 22–2–55ல், மறைந்த மாவீரன் பாண்டியனாரின் 2-வது ஆண்டு மறைவு நினைவு விழா கொண்டாடுவது என்று தீர்மானிக்கப்பட்டது.

இளையபெருமாள்நல்லூரில் தி. மு. க. பொதுக்கூட்டம்

திருச்சி — உடையார்பாளையம் வட்டத்தைச் சேர்ந்த இவ்வூர் தி. மு. கழகப் பொதுக் கூட்டம் தோழர் ப. தவசீலன் தலைமையில் 24—1—55 மாலை 5 மணிக்கு நடைபெற்றது. தோழர்கள் லா. இராமலிங்கம், பொ. தருமன், வரதராசன், அரங்கநாதன், வேலாயுததாசன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். கூட்டத்தில் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

பூலாங்கிணறு—கணபதி பாளையம் தி. மு. கழகம்

21—1—55 மாலை 6 மணிக்கு, கழகச் சார்பில், தோழர் கோ. இராமசாமி தலைமையில் ஒரு ஊர்வலமும், 7 மணிக்கு கணபதி பாளையம் தி. மு. கழகச் செயலாளர் தலைமையில் ஓர் பொதுக்கூட்டமும் நடைபெற்றது. தோழர்கள் ப. நாராயணன்; இரா. தங்கவேலு, சிற்றுளி சுப்பிரமணியம், இ. துரை ஆகியோர் இன்றைய சமுதாய, பொருளாதார, அரசியல் நிலைகள் குறித்துச் சொற்பொழிவாற்றினர்.

சிங்கிபுரம் தி. மு. கழகம்

23—1—55ல் பி. குமரவேல் தலைமையில் நடைபெற்ற கழக உறுப்பினர்கள் கூட்டத்தில், வேப்பிலைப்பட்டி, மன்னுக்கம்பாளையம், பன்னதாதனூர், நீர்முள்ளிக் குட்டை, அத்தனூர்பட்டி ஆகிய ஊர்களில் கழகப் பொதுக் கூட்டங்கள் நடத்துவதென தீர்மானிக்கப்பட்டது.

சங்கரநயினார்கோவில் தி. மு. கழகம்

10—1—55 மாலை 5-30 மணிக்கு கழகச் சார்பில் தொண்டர்கள் அணிவகுப்புடன், தோழர்கள் எஸ். எஸ். இராசேந்திரன், டி. வி. நாராயணசாமி ஆகியோர் அடங்கிய ஊர்வலமொன்று, தோழர் டி. ஆர். சுப்பிரமணியம் தலைமையில் சென்று காந்திமண்டபத்தை அடைந்தது. இரவு 7 மணி அளவில் தோழர் ஏ. எஸ். ஆறுமுகம் தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், தோழர் ஆ. கந்தசாமி சொற்பொழிவாற்றிய பின் தோழர் டி. ஆர். சுப்பிரமணியம் 'இன்றைய அரசியல் நிலையும் - பத்திரிகைகள் இருட்டடிப்பும்' என்பது பற்றிச் சொற்பொழிவாற்றினர். பின்னர், தோழர் டி. வி. நாராயணசாமி 'வடநாடும் - தென்னாடும்' என்பதை விளக்கியும், தனித் திராவிடம் என் பிரிய வேண்டும் என்பது பற்றியும் சொற்பொழிவாற்றிய பின், தோழர் எஸ். எஸ். இராசேந்திரன், 'நாடக சட்டமும்- தி. மு. கழகமும்' என்பதையும், ஆண்டவன் பேரால் நடக்கும் அபத்தங்களையும் விளக்கிப் பேசினர். கூட்ட முடிவில் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பரமக்குடி தி. மு. கழக முதலாண்டு விழா

27—1—55 இரவு 9 மணிக்கு தோழர் எம். இலக்குவனார் தலைமையில் நடைபெற்ற கழக முதலாண்டு விழாக் கூட்டத்தில் தோழர்கள் என். வி. நடராசன், ஜீவாதாசன், ஆர். எஸ். பிரகாசம், நாகலிங்கம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

தோழர் என். வி. நடராசன் அவர்கள், கழகக் கொள்கைகளையும், நாட்டின் அரசியல் சூழ்நிலைகளை விளக்கியும், திராவிடநாட்டுப் பிரிவினையின் அவசியத்தைக் குறிப்பிட்டும் சொற்பொழிவாற்றினர்.

தோழர் பழம்நீ அவர்களின் உருவப்படத்தை தோழர் ஆர். எஸ். பிரகாசம் திறந்துவைத்தார். கூட்டத்தில் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

சத்திரப்பட்டியில் தி. மு. கழகத் துவக்கம்

20—1—55-ல் அறிவுப் பூங்கா (மதுரை மாவட்ட தி. மு. கழக உட்கிளை) சார்பில் தோழர் எஸ். முத்து தலைமையில் தி. மு. கழகம் (கிளை) திறப்பு விழா நடைபெற்றது. தோழர்கள் பி. கோபால கிருஷ்ணன் கழகக் கொடியேற்றி வைத்த பின்னர். தோழர்கள் அரசுக்கண்ணன், வி. வி. முத்துவீரன், கே. எஸ். மணி, மணிவண்ணன் ஆகியோர் பேசியதும், தோழர் சி. பி. சிற்றரசு தி. மு. கழகக் கொள்கைகளை விளக்கியும், திராவிட நாடு பிரிய வேண்டியதின் அவசியத்தையும் விளக்கிச் சொற்பொழிவாற்றினர்.

பம்பாய் தி. மு. கழகம்

26–1–55 6 மாலை மணிக்கு, பம்பாய்–தாராவி குடியரசுநிலையத்தில் தோழர் எஸ். சிவகுருநாதன் தலைமையில், கடந்த ஆண்டு கழக நிர்வாகிகளுக்குப் பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் டி. வி. துரை, எல். என். செழியன், உ. அ. செல்லையா, எஸ். வள்ளிநாயகம் ஆகியோர் கடந்த ஆண்டு நிர்வாகிகளைப் பாராட்டிச் சொற்பொழிவாற்றினர். பாராட்டுக் கூட்டத்தில் கலந்துகொண்ட தோழர்களுக்கு சிற்றுண்டியும், தேநீரும் வழங்கப்பட்டது. பாராட்டுக்கு நன்றி தெரிவித்துவிட்டு, தோழர் எஸ். தியாகராசன் கழகத்தின் எதிர்காலப் பணியைப் பற்றி சொற்பொழிவாற்றிய பின், தோழர்கள் இரா. மா. சண்முகராசன், த. மு. பொற்கோ ஆகியோரும் தங்களுக்களிக்கப்பட்ட பாராட்டிற்கு நன்றி தெரிவித்துப் பேசினர்.

மீண்டும் வெளியேறும் பல்லவி!

இந்திய சர்க்காரில் தொழில், வர்த்தக அமைச்சராக இருந்து வரும் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் அவர்கள் தமது பதவியை விட்டு விலகிக்கொள்ள தீர்மானித்து விட்டதாகச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது

சர்க்கார் கைத்தொழில் கொள்கையை நிறைவேற்றுகின்ற பொறுப்புகள் பல மந்திரிகளிடமும் இருந்துவருவதால், தம்மால், பலனளிக்கத்தக்க வகையில் வேலை செய்ய இயலவில்லை என்று கருதி டி. டி. கே. அவர்கள், தாம் பதவியிலிருந்து விலகிக்கொள்ளுவதாகக் கடந்த நவம்பர் திங்களில் ஒரு 'நெருக்கடி'யை ஏற்படுத்தியது நினைவிருக்கலாம்.

பின்னர், மந்திரிகளின் இலாகா பொறுப்புகள் மாற்றப்படுவது பற்றி இந்திய சர்க்காரில் ஒரு யோசனை இருந்து வருவதாகக் கூறப்பட்டதின்பேரில், அவர்மீண்டும் தமது 'வெளியேறும் படல'த்தை மாற்றிக்கொண்டு மீண்டும் பதவியிலேயே நீடித்திருக்க இசைவு தந்ததும் தெரிந்ததேயாகும்.

இப்போது, மந்திரிகளின் இலாகா மாறுதல்களில் தற்சமயம் ஒன்றும் செய்துகொள்வதற்கில்லை என்று சர்க்காரில் முடிவு செய்யப்பட்டிருப்பதால்தான் மீண்டும் அவர் தமது 'பழைய பல்லவி'யைப்பாட ஆரம்பித்துவிட்டிருக்கிறாராம்.

தொழில் சம்மந்தமான எல்லாவற்றையும் கவனிக்க ஒரே இலாகா இருப்பதுதான் வசதி, வாய்ப்புக்கொண்டதாகும் என்று டி. டி. கே. கருதியதற்கிணங்க உற்பத்தி இலாகா, தனியான ஒரு இலாகாவாக இல்லாமல் தொழில் இலாகாவுடன் இணைக்கப்பட்டுவிடலாம் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், பிரதமர் நேருவோ, தொழில் அபிவிருத்தியில் சர்க்கார் பொறுப்பை அதிகரிப்பதில் இப்போது விசேட கவனம் செலுத்தப்படுவதால், அரசாங்கத் தொழில்கள் அனைத்தையும் கவனிக்க, உற்பத்தி இலாகா ஒன்று தனியாக ஒரு இலாகாவாக இயங்க வேண்டியது அவசியமாகும் என்று கருதுகிறாராம்.

இதன்படி உற்பத்தி, தொழில், வர்த்தக இலாகா அமைச்சர்களும், நிதியமைச்சர், திட்டக் குழுவில் தொழில்கள் பற்றிய உறுப்பினர்கள் ஆகியோரடங்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டது அப்போது, இலாகாக்களிடையே இணைப்பாக வேலை நடக்க, இதுபோன்ற ஒரு ஏற்பாடே போதுமென்றும், அதனால் இலாகாக்களை இணைக்க வேண்டிய அவசியம் எதுவும் இல்லையென்றும் கருதப்பட்டது.

டி. டி. கே. அவர்கள் தமது இராஜிநாமா கடிதத்தை பிரதமர் நேருவுக்கு அனுப்பிவிட்டார் என்றும் அச்செய்தி தெரிவிக்கிறது.

வேலையற்றிருப்போர் மாநாடு

சென்னை, ஜன. 30—

படித்து பட்டம் பெற்றும் வேலையற்றிருக்கின்ற அகில-இந்திய இளைஞர்கள் மாநாடொன்று, பிப்ரவரி திங்கள் 19, 20 ஆகிய நாட்களில் சென்னையில் நடைபெறும்.

படித்துவிட்டு வேலை கிடைக்காமல் கஷ்டப்படுகின்றவர்களின் புள்ளி விவரங்களைப் பற்றிய சர்வதேச கண்காட்சி ஒன்றும் அது சமயத்தில் நடத்தப்படுமென்றும், மேற்படி கண்காட்சியை தோழர் பி. டி. ராசன் திறந்துவைப்பார் என்றும் கூறப்படுகிறது.

சுமூக உறவு காண!

ரஷ்யாவுக்கும்—ஜப்பானுக்கும் இடையே உள்ள உறவுகளை ஒழுங்குபடுத்தி சுமூகமானதாக்கும் பொருட்டு ரஷ்யா, ஜப்பானுடன் பேச்சுவார்த்தைகள் நடத்திவருவதாகக் கூறப்படுகிறது.

4000 கல்லூரி மாணவர்கள் வேலை நிறுத்தம்

மாணவிகளும் பங்கு பெறுகின்றனர்

இரண்டுபேரை கல்லூரியிலிருந்து வெளியேற்றியதே காரணமாம்

பரோடா பல்கலைக் கழகத்தில் சம்பவம்

பரோடா, ஜன. 31—

பரோடா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த **4,000** மாணவர்கள் கடந்த சனிக்கிழமை முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரிகிறது.

இன்று, குடும்பக் கலைக் கல்லூரியைச் சேர்ந்த **110** மாணவிகளும் வேலை நிறுத்தத்தில் சேர்ந்து கொண்டனராம்.

தங்களுடன் படித்த மாணவர்கள் இருவரை படிப்பு 'முன்னேற்றம் திருப்திகரமாயில்லை' என்ற காரணங்காட்டி, கல்லூரியிலிருந்து வெளியேற்றியதை எதிர்த்தும், அவர்கள் உடனடியாக மீண்டும் தொடர்ந்து படிக்க அனுமதிக்கப்பட வேண்டுமென்றும், எந்த மாணவரும் படிக்கும்போது இடையில், படிக்க முடியாதவாறு நிறுத்தப்பட முடியாதவகையில் கல்லூரி நடைமுறை விதிகளைத் திருத்த வேண்டும் என்றும் கோரியும், மாணவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனராம்.

சென்னை நகர சபை

மக்களிடம் ரூ. 40 லட்சம் கடன் வாங்கும்

சென்னை, ஜன. 31—

அவசரமான சுகாதாரத் திட்டங்களைப் பூர்த்தி செய்யவும், லாபமளிக்கக் கூடிய சில முயற்சிகளை மேற்கொள்ளவும், சென்னை நகர சபை, பொது மக்களிடம் ரூ. 40 லட்சம் கடன் கேட்கத் தீர்மானித்திருக்கிறது.

நகர சபையின் சாக்கடை பண்ணைக்காக ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட 200 ஏகர் நிலம் தவிர, மேலும் 600 ஏகர் நிலம் ஆர்ஜிதம் செய்தல், பூந்தமல்லி பெரியசாலை எல்லையில் ஒரு பெரிய பால் பண்ணை ஆரம்பித்து, மேலும் 80 பசுக்கள் வாங்க ஏற்பாடு செய்தல், நகர எல்லைக்குள் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ள இடங்களுக்கு மின்சார வசதி செய்தல், ஷெனாய் நகருக்கருகில் ஏற்கனவே ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ள 80 ஏகர் நிலத்திற்கும் சுகாதார வசதிசெய்து தருவது, நகரிலுள்ள கக்கூசுகளை அபிவிருத்தி செய்து, மேலும் தேவைப்படுகின்ற இடங்களில் கக்கூசுகள் கட்டுதல், குழந்தைகள் அணிவகுப்பை நிரந்தர ஏற்பாடாக்கி, அதனை ஆண்டுதோறும் செப்டம்பர் திங்களில் நடத்தி அதன் மூலம் கிடைக்கும் வருமானத்திலிருந்து ஏழை மாணவர்களுக்குத் துணி வாங்கித் தருவதுபோன்ற திட்டங்கள், நகர சபையின் 'அவசர திட்டங்களில்' முக்கியமானவையாகும்.

1955—56ம் ஆண்டில் அமுல் நடத்தவேண்டிய திட்டங்களுக்கான கடன் தொகைகளையெல்லாம் சர்க்கார் அங்கீகாரத்துடன்; நகர சபை அந்த ஆண்டில் எழுப்பும் என்றும் கூறப்படுகிறது.

சென்னை மாநிலத்தில் மின்சார உற்பத்தி

அதிகரித்துள்ளதென அறிவிப்பு

சென்னை, ஜன. 30—

சென்னை மாநிலத்திலுள்ள மின்சார உற்பத்தி, கடந்த 6 அல்லது 7 ஆண்டுகளில், முன்னிருந்த அளவைக் காட்டிலும் இருமடங்கு அதிகமாகி விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா முழுமையிலுமுள்ள மின்சார உற்பத்தி நிலையைக் கணிக்கும்போது, சென்னை மாநிலம் 3-வது இடத்தை வகித்து வருகிறதாம்.

ஏழு ஆண்டுகட்கு முன்னர், சென்னை மாநிலத்தில் 1,04,000 - கிலோவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டது; இப்போது, அந்த அளவு 2,47,300 கிலோவாட்டாக அதிகரித்துள்ளது.

சென்ற 6, 7 ஆண்டுகளாக மாநிலத்தில் மின்சாரத் திட்டங்களுக்காக ரூ. 22 கோடி செலவழிக்கப்பட்டது.

தியாகிகள் நினைவு நாள்

மகாத்மா காந்தியார் மறைந்த 7-வது ஆண்டு 'சர்வோதய' தினமும், நாட்டுச் சுதந்திரத்துக்காக உயிரை அர்ப்பணித்த வீரத் தியாகிகளின் நினைவு நாளும் இந்தியா முழுவதும் 30-ந் தேதியன்று கொண்டாடப்பட்டது.

முற்பகல் 11 மணிக்கு, நாடு முழுவதிலும் 2 நிமிட நேரம் மௌனம் கடைப்பிடிக்கப்பட்டது.

அந்த நேரத்தில், ரயில் வண்டிகள், மோட்டார், கார்கள் யாவும் நின்றுவிட்டதோடு, தொழிற்சாலைகள் முதலிய எல்லா இடங்களிலும் வேலை நிறுத்தப்பட்டது. அகில இந்திய வானொலியும் 2 நிமிட நேரம் ஒலிபரப்புதலை நிறுத்தியது.

ஆவடியில் ஒரு வானொலி நிலையம்

ஆவடியில் அகில இந்திய வானொலியினர், வெளிநாடுகளுக்கு ஒலிபரப்புவதற்கென்று சக்தி வாய்ந்த ஒரு ஒலிபரப்பு நிலையத்தை சீக்கிரமே அமைக்கும் என்று தெரியவருகிறது.

ஆவடியை சென்னையுடன் இணைத்து, ரூ. 4 இலட்சம் செலவில் ஏற்கனவே இதற்கான 'கேபிள்' கம்பிகள் போடப்பட்டுவிட்டனவாம்.

குடியரசு தினம்

கொண்டாடுவது எப்படி?

கோரக்பூருக்கு 44 கல் தொலைவிலுள்ள பத்ரவ்னு எனும் இடத்தில், கடந்த ஜன. 26-ந் தேதியன்று, (குடியரசு தினம்) ஏற்பட்ட ஒரு கைகலப்பின்போது, இந்திய தேசீய தொழிற் சங்க ஊழியர்கள் 12 பேரும், சோஷலிஸ்டுகள் 13 பேரும் காயமடைந்துள்ளார்களாம்.

இக்கலவரத்தையொட்டி போலீசார் கைது செய்த 15 பேர்களில் உத்தர பிரதேச சோஷலிஸ்டு பிரமுகர் ஜகன்னுதமால் எம். எல் ஏ. - யும் ஒருவராம். இவர், பின்னர் ஜாமீனில் விடுவிக்கப்பட்டாராம்.

குடியரசு தினத்தை எப்படிக் கொண்டாடுவது என்பது பற்றி இங்குள்ள சர்க்கரை ஆலையிலுள்ள காங்கிரஸ், சோஷலிஸ்டு கட்சி தொழிலாளர் யூனியன்களின் பிரதிநிதிகள் ஆலோசிக்கக் கூடுகையில், யாரோ சில காலிகள் கூட்டத்தில் கல் வீசியதே இந்தக் கலகத்திற்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

மத்திய பிரதேச உருக்குத் தொழில்

புதுடில்லி, ஜன. 31—

மத்திய பிரதேசத்திலுள்ள பிலாகி எனுமிடத்தில், ரஷ்யாவின் உதவியுடன் அமைக்கப்பட இருக்கும் இரண்டாவது உருக்குத் தொழிற்சாலையில், 1958-ம் ஆண்டு இறுதியில் உற்பத்தி வேலைகள் ஆரம்பமாகிவிடுமாம்.

இத்தொழிற்சாலையை அமைக்க செலவாகும் 100 கோடி ரூபாயில் 50 கோடி ரூபாய் சோவியத் சர்க்காரிடமிருந்து பெறப்படுமாம்.

மற்றொரு உருக்குத் தொழிற்சாலையை அமைக்க பிரிட்டிஷார் விருப்பம் தெரிவித்திருப்பதாயும், விரைவில் இதற்கென ஒரு பிரிட்டிஷ் நிபுணர் குழுவை இந்தியா அழைக்குமென்றும் கூறப்படுகிறது.

ரூ. 10 லட்சம் நன்கொடை

பம்பாய் மாநிலத்தில், தாய்—குழந்தை பராமரிப்பு சுகாதார சர்வீஸ் திட்டத்திற்காக, ஐ. நா, தனது சர்வதேச குழந்தைகள் அவசர உதவி நிதியிலிருந்து ரூ. 10 லட்சம் (2,30,000 டாலர்) ஒதுக்கியுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

கைரா மாவட்டத்திலுள்ள ஆனந்தில் ஒரு பால் 'பாக்டரி' ஆரம்பிக்க உத்தேசித்துள்ளதாக, அந்நிதியின் நிர்வாக டைரக்டர் கூறியிருக்கிறார்.

பாகிஸ்தானில் பெண்ணுரிமைக் கிளர்ச்சி

எகிப்து மாதர் சங்கத் தலைவியின் வருகைக்குப் பின் வலுப்பெற்றுள்ளதாம்

லாகூர், ஜன. 31—

"பலதார மணத்திற்குத் தடை விதிக்கப்பட்டாக வேண்டும்; பாகிஸ்தான் பெண்களுக்குப் போடப்பட்டுள்ள விலங்குகள் தகர்த்தெறியப்பட வேண்டும்."

இவ்வகையான கோஷங்கள், பாகிஸ்தானில் தற்போது வெளிக்கிளம்பிக்கொண்டே இருக்கின்றனவாம்.

கடந்த டிசம்பர் திங்களில் நடைபெற்ற கராச்சி முஸ்லீம் லீகின் மாதர் பிரிவுக் கூட்டம், பலதார மணம் தடை செய்யப்பட வேண்டும் என்று பிரதமர் முகமது அலியிடம் கோரிக் கொண்டுள்ளது.

அதே நேரத்தில், பஞ்சாபைச் சேர்ந்த பெண் எம். எல். ஏ -யான பீகம் சால்மா ஹுசேன் என்பவர், முஸ்லீம் விவாகம் பற்றிய சட்டத்தைத் தெளிவுபடுத்தும் மசோதா ஒன்றைக் கொண்டுவரப் போவதாக அறிவித்திருந்தார்; இதற்குப் பெரும்பான்மையான ஆதரவும் காட்டப்பட்டது.

பெண்ணுரிமை கோருவதில் மிக மிகத் தீவிரவாதிகள் சிலர், ஒரு பெண் பல கணவர்களை மணந்துகொள்ள உரிமை அளிக்கப்பட வேண்டும் என்றுகூடக் கோருகிறார்களாம்!

எகிப்து மாதர் இயக்கத் தலைவியான டோரியா ஷபீக் பாகிஸ்தானுக்கு வருகை தந்த பின்னரே, பாகிஸ்தானில் இந்தப் பெண்ணுரிமைக் கிளர்ச்சி இவ்வளவு வலுத்துவிட்டிருக்கிறதாகக் கூறப்படுகிறது.

காஞ்சியில் கலை விருந்து!

5-2-55 இரவு 9-30 மணிக்கு

காஞ்சீபுரம் கண்ணன் டாக்கீசில்

புரட்சி நடிகர் M. G. ராமச்சந்திரன், M. G. சக்கரபாணி, நாராயண பிள்ளை, G. சகுந்தலா மற்றும் M. G. R. நாடக மன்றத்தார் நடிக்கும்

இன்பக் கனவு

நாடகம்

சி. என். அண்ணாதுரை

அவர்கள் தலைமையில் நடைபெறும்

★

கட்டணம்: ரூ. 3, 2, 1 (பெண்களுக்கு தனியிடம் உண்டு)

காஞ்சீபுரம்,
1—2—55

R. பாபு,
பொறுப்பாளர்

'காதலி'யைப் பிரித்தவரைக் கொன்றது யானை!

மெர்க்காரா, (குடகு) ஜன. 31—

இங்குள்ள மர வியாபாரி ஒருவர் 'சரசி' என்ற பெயருடைய பெண் யானை ஒன்றை வாடகைக்கு வாங்கியிருந்தார். சில நாட்களுக்கு முன்னர், அந்த 'சரசி'யும், மற்றொரு ஆண் யானையும், காட்டில் மேய்ச்சலுக்காக அவிழ்த்துவிடப்பட்டனவாம். பின்னர், அவைகளை அழைத்து வருவதற்காக யானைப் பாகன் அங்கே சென்றபோது, 'சரசி,' அதனுடன் அனுப்பப்பட்ட ஆண் யானையை விட்டுப் பிரிந்து, மற்றொரு முரட்டு யானையுடன் சரசமாடிக் கொண்டிருந்தாளாம்! அவளுடன் அனுப்பப்பட்ட ஆண் யானை காயங்களுடன், பரிதாபமாகக் காட்சியளித்திருக்கிறது.

இதைச் சகிக்காத பாகன், சரசியைப் பெயர் சொல்லி அழைக்க, சரசியும் தனது புதுக் காதலனை விட்டுவிட்டு பாகனைப் பின் தொடர்ந்திருக்கிறது. இதுகண்டு கோபமுற்ற அந்தக் காட்டு யானைக் காதலன், பாகனை துரத்த ஆரம்பிக்க, பாகனும் பயந்து, சரசியை அங்கேயே விட்டுவிட்டுப் போய் விட்டாராம். சிறிது நேரம் கழித்து அந்தப் பாகன் மற்றும் சிலரைத் துணைக்கழைத்துக் கொண்டு அங்கே வர, இதைக் கண்டு கோபாவேசமுற்ற அந்தக் காதலன், தனது காதலுக்குக் குறுக்கே நின்றவர்களைத் துரத்தித் துரத்தி அடிக்க ஆரம்பித்து விட்டிருக்கிறது. அந்தச் சமயத்தில் கலாசன் என்பவர் அந்த யானையின் காலிலகப்பட்டு மிதியுண்டு இறந்து போனாராம்.

இப்போது அந்த 'இளங்காதலர்கள்' வெகு 'சுதந்திரமாக' அக்காட்டில் வாழ்கிறார்களாம். புதுக் காதலனைக் கொன்றால்தான் 'சரசி' மீண்டும் கிடைக்கப்பெறுவாளாம்!

பெங்களூரிலும் சினிமா தியேட்டரில் பிரசவம்

பெங்களூரிலுள்ள ஒரு திரைப் படக் காட்சி சாலையில், திரைப் படம் ஒன்றைப் பார்க்கச் சென்ற கர்ப்பிணி ஒருவர், படக் காட்சியின் போது ஓயாத சிரிப்பில் மூழ்கி விட்டதால், பிரசவ வேதனை கொண்டு. காட்சிச் சாலையிலேயே ஒரு பெண் மகவு பெற்றெடுத்தாராம். பிரசவ காலத்தில் அவருக்கு உதவியாக அங்கு உட்கார்ந்து கொண்டிருந்த மற்ற பெண்கள் துணை செய்தனராம்.

இது நடந்த அதே நாளில்தான் சென்னையிலும் உள்ள திரைப்படக் காட்சி சாலையில் இப்படி ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது நினைவிருக்கக் கூடும்.

ஏஜண்டுகள் தேவை

கீழ்க்கண்ட ஊர்களில் 'நம் நாடு' இதழை விற்பனை செய்ய முன்பணம் கட்டக்கூடிய பொறுப்பு வாய்ந்த ஏஜண்டுகள் தேவை.

தஞ்சாவூர்
நாகப்பட்டினம்
செங்கற்பட்டு
கடலூர் N. T.
பொன்னேரி

நிர்வாகி, 'நம் நாடு'

சொற் பயிற்சிக் கூட்டம்

2—2—55 மாலை 6 மணிக்கு, சென்னை 5-வது வட்ட தி. மு. கழகத்தில், தோழர் சி எத்திராசன் தலைமையில், 'எண்ணம்' என்னும் பொருள் பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

பொதுக்கூட்டங்கள்

2—2—55 மாலை 6 மணிக்கு, கார்ப்பரேஷன் ஒர்க்ஷாப்புக்கு எதிரில் (சென்னை, அண்ணுபிள்ளை தெருவில்) கார்ப்பரேஷன் தொழிலாளரின் மாபெரும் பொதுக்கூட்டம் தோழர் ஜி. ராஜமன்னர் தலைமையில் நடைபெறும். தோழர்கள் பலர் பேசுவர்.

* * *

3—2—55 மாலை 6 மணிக்கு, சென்னை, அயன்புரம் மார்க்கட் மைதானத்தில், அயன்புரம் பாரதிதாசன் நூல் நிலைய 4-ம் ஆண்டு விழாப் பொதுக்கூட்டம் தோழியர் அலமேலு அப்பாதுரை தலைமையில் நடைபெறும். தோழர்கள் க. அப்பாதுரை, கண்ணதாசன் ஆகியோர் பேசுவர்.

மாநில புனரமைப்புக் குழு அறிக்கை தாமதமாகலாம்

போபால், ஜன. 31—

மாநில புனரமைப்புக் குழுத் தலைவரான பஸல் அலி உடல்நலம் குன்றியிருப்பதாலும், இன்னும் குழு, பல மாநிலங்களுக்குச் சென்று விசாரணை செய்யவேண்டியிருப்பதாலும் ஏற்கனவே அறிவித்த மாதிரி வரும் ஜூன் மாதத்தில் குழுவின் அறிக்கை கிடைப்பது சற்று தாமதப்படக்கூடும் என்று மத்திய உள்நாட்டு மந்திரி பண்டித பந்த் கூறியிருக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி என் அண்ணாதுரை, எம். ஏ..

பெங்களூர் மாநாடுகள்—பிப். 12, 13